உ

*சிவமயம்*

*திருச்சிற்றம்பலம்*

**திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார்**

*அருளிய*

# திருக்களிற்றுப்படியார் விளக்கவுரை

**தில்லைச்சிற்றம்பலவர், தே.ஆ. ஸ்ரீநிவாஸாசாரியன், க. வெள்ளை வாரணனார், கு. சுந்தரமூர்த்தி** ஆகியோர் உரைகளைத் தழுவித் தொகுக்கப்பட்டது.

*பதிப்பாசிரியர்*

**டாக்டர் இராச. வசந்தகுமார்**

வேந்தர்

**கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம்**

(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)

**பன்னிரு திருமுறை ஆய்வு மையம்**

**கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம்**

**(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)**

ஈச்சனாரி, கோவை - 21.

## நூற்குறிப்பு

நூல் பெயர் : **திருக்களிற்றுப்படியார்**

மூல நூலாசிரியர் : **திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார்**

நூல் வகை : செய்யுள் மற்றும் உரைநூல் (மெய்கண்ட சாத்திர இரண்டாம் நூல்)

வெளியீடு : **பன்னிரு திருமுறை ஆய்வு மையம்**
**கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம் (நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)**
**கோயம்புத்தூர்.**

வெளியீட்டு எண் : **68**


வெளியிடும் நாள் : **27 - 10 - 2018**

பக்கங்கள் : **288**

தாள் : மேப்லித்தோ 80 gsm

அளவு : கிரவுன் 1/8

அச்சகம் : **செஞ்சுடர் அச்சகம்**
கோ.வா.பாளையம்,
போத்தனூர், கோவை – 23.
செல் : 98431 74238



உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சைவ சித்தாந்த சாத்திரங்கள்

# II. திருக்களிற்றுப்படியார்

## பொருளடக்கம்


| செய்யுள் எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| | பதிப்புரை | 17 |
| | I. உபதேச இயல் (1-14) | |
| 1. | அம்மைஅப்ப ரேஉலகுக்(கு) அம்மைஅப்பர் என்றறிக<br>அம்மைஅப்பர் அப்பரிசே வந்தளிப்பர் – அம்மையப்பர்<br>எல்லா உலகுக்கும் அப்புறத்தார் இப்புறத்தும்<br>அல்லார்போல் நிற்பார் அவர். | 35 |
| 2. | தம்மில் தலைப்பட்டார் பாலே தலைப்பட்டுத்<br>தம்மில் தலைப்படுதல் தாமுணரின் – தம்மில்<br>நிலைப்படுவர் ஓரிருவர் நீக்கிநிலை யாக்கித்<br>தலைப்படுவர் தாம்அத் தலை. | 45 |
| 3. | என்னறிவு சென்றளவில் யானின் றறிந்தபடி<br>என்னறிவி லாரறிக என்றொருவன் – சொன்னபடி<br>சொல்லக்கேள் என்றொருவன் சொன்னான் எனக்கதனைச்<br>சொல்லக்கேள் நானுனக்கச் சொல். | 53 |
| 4. | அகளமய மாய்நின்ற அம்பலத்தெங் கூத்தன்<br>சகளமயம் போல்உலகில் தங்கி – நிகளமாம்<br>ஆணவ, மூல மலமகல ஆண்டான்காண்<br>மாணவக என்னுடனாய் வந்து. | 56 |
| 5. | ஆகமங்கள் எங்கே அறுசமயம் தானெங்கே<br>யோகங்கள் எங்கே உணர்வெங்கே – பாகத்து<br>அருள்வடிவும் தானுமாய் ஆண்டிலனேல் அந்தப்<br>பெருவடிவை யாரறிவார் பேசு. | 66 |

| | | |
|---|---|---|
| 6. | சாத்திரத்தை ஓதினர்க்குச் சற்குருவின் தன்வசன<br>மாத்திரத்தே வாய்த்தவளம் வந்துறுமே – ஆர்த்தகடல்<br>தண்ணீர் குடித்தவர்க்குத் தாகம் தணிந்திடுமோ<br>தெண்ணீர்மை யாய்இதனைச் செப்பு. | 72 |
| 7. | இன்று பசுவின் மலமன்றே இவ்வுலகில்<br>நின்ற மலமனைத்தும் நீக்குவதிங்–கென்றால்<br>உருவுடையா னன்றே உருவழியப் பாயும்<br>உருவருள வல்லா னுரை. | 76 |
| 8. | கண்டத்தைக் கொண்டு கரும முடித்தவரே<br>அண்டத்தி னப்புறத்த தென்னாதே – அண்டத்தின்<br>அப்புறமும் இப்புறமும் ஆரறிவும் சென்றறியும்<br>எப்புறமும் கண்டவர்கள் இன்று. | 78 |
| 9. | அன்றுமுதல் ஆரேனும் ஆளாய் உடனாகிச்<br>சென்றவர்க்கும் இன்னதெனச் சென்றதிலை – இன்றிதனை<br>எவ்வா றிருந்ததென் றெவ்வண்ணம் சொல்லுகேன்<br>அவ்வா றிருந்த தது. | 86 |
| 10. | ஒன்றுங் குறியே குறியாத லாலதனுக்<br>கொன்றுங் குறியொன் றிலாமையினால் – ஒன்றோ<br>டுவமிக்க லாவதுவுந் தானில்லை ஒவ்வாத்<br>தவமிக்கா ரேயிதற்குச் சான்று. | 86 |
| 11. | ஆற்றால் அலைகடற்கே பாய்ந்தநீர் அந்நீர்மை<br>மாற்றியவ் வாற்றான் மறித்தாற் போல் – தோற்றிப்<br>புலன்களெனப் போதம் புறம்பொழியும் நந்தம்<br>மலங்களற மாற்றுவிக்கும் வந்து. | 93 |
| 12. | பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்<br>காலனை அன்றேவிக் கராங்கொண்ட – பாலன்<br>மரணம் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தம்<br>கரணம்போ லல்லாமை காண். | 96 |
| 13. | தூங்கினரைத் தூய சயனத்தே விட்டதற்பின்<br>தாங்களே சட்ட உறங்குவர்கள் – ஆங்கதுபோல்<br>ஐயன் அருட்கடைக்கண் ஆண்டதற்பின் அப்பொருளாய்ப்<br>பைய விளையுமெனப் பார். | 101 |

| | | |
|---|---|---|
| 14. | உள்ள முதலனைத்தும் ஒன்ற உருகவரில்<br>உள்ளம் உருகவந் துன்னுடனாம் – தெள்ளி<br>உணருமவர் தாங்கள் உளராக என்றும்<br>புணரவர நில்லா பொருள். | 107 |
| | **II. உபாய இயல் 1. சிவதன்மப்பகுதி** (15-21) | |
| 15. | நல்லசிவ தன்மத்தால் நல்லசிவ யோகத்தால்<br>நல்லசிவ ஞானத்தால் நானழிய – வல்லதனால்<br>ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படுங்காண்<br>ஆரேனும் காணா அரன். | 110 |
| 16. | மெல்வினையே என்ன வியனுலகில் ஆற்றரிய<br>வல்வினையே என்ன வருமிரண்டும் – சொல்லில்<br>சிவதன்ம மாம்அவற்றிற் சென்றதிலே செல்வாய்<br>பவகன்மம் நீங்கும் படி. | 113 |
| 17. | ஆதியை அர்ச்சித்தற் கங்கமும் அங்கங்கே<br>தீதில் திறம்பலவும் செய்வனவும் – வேதியனே!<br>நல்வினையா மென்றே நமக்குமெளி தானவற்றை<br>மெல்வினையே என்றதுநாம் வேறு. | 116 |
| 18. | வரங்கள் தரும்செய்ய வயிரவர்க்குத் தங்கள்<br>கரங்களினால் அன்றுகறி யாக்க – இரங்காதே<br>கொல்வினையே செய்யும் கொடுவினையே ஆனவற்றை<br>வல்வினையே என்றதுநாம் மற்று. | 119 |
| 19. | பாதக மென்றும் பழியென்றும் பாராதே<br>தாதைய வேதியனைத் தாளிரண்டும் – சேதிப்பக்<br>கண்டீசர் தாமாம் பரிசளித்தார் கண்டாயே<br>சண்டீசர் தன்செயலால் தான். | 122 |
| 20. | செய்யில் உகுத்த திருப்படி மாற்றதனை<br>ஐய இதுஅமுது செய்கென்று – பையவிருந்<br>தூட்டி அறுத்தவர்க்கே ஊட்டி யறுத்தவரை<br>நாட்டியுரை செய்வதென்னோ நாம். | 125 |
| 21. | செய்யும் செயலே செயலாகச் சென்றுதமைப்<br>பையக் கொடுத்தார் பரங்கெட்டார் – ஐயா<br>உழவும் தனிசும் ஒருமுகமே ஆனால்<br>இழவுண்டோ சொல்லாய் இது. | 127 |

| | | |
|---|---|---|
| | **II. உபாய இயல் 2. சிவயோகப்பகுதி (22–36)** | |
| 22. | ஆதார யோகம் நிராதார யோகமென<br>மீதானத் தெய்தும் விதிஇரண்டே – ஆதாரத்(து)<br>ஆக்கும் பொருளாலே ஆக்கும் பொருளாம்ஒன்(று);<br>ஆக்காப் பொருளேஒன் றாம். | 132 |
| 23. | ஆக்கி ஒருபொருளை ஆதாரத்(து) அப்பொருளை<br>நோக்கி அணுவில் அணுநெகிழப் – பார்க்கில்<br>இவனாகை தானொழிந்திட்(டு) ஏகமாம்; ஏகத்<br>தவனாகை ஆதார மாம். | 136 |
| 24. | கொண்ட தொருபொருளைக் கோடிபடக் கூறுசெயின்<br>கொண்டவனும் அப்பரிசே கூறுபடும் – கொண்ட<br>இருபொருளு மன்றியே இன்ன திதுவென்னா<br>ஒருபொருளே யாயிருக்கும் உற்று. | 141 |
| 25. | அஞ்செழுத்து மேயம்மை அப்பர்தமைக் காட்டுதலால்<br>அஞ்செழுத்தை யாறாகப் பெற்றறிந்(து) – அஞ்செழுத்தை<br>ஓதப்புக் குள்ள மதியும் கெடிலுமைகோன்<br>கேதமற வந்தளிக்குங் கேள். | 143 |
| 26. | ஆக்கப் படாத பொருளாய் அனைத்தினிலும்<br>தாக்கித்தான் ஒன்றோடும் தாக்காதே – நீக்கிஉடன்<br>நிற்கும் பொருளுடனே நிற்கும் பொருளுடனாய்<br>நிற்கை நிராதார மாம். | 146 |
| 27. | காண்கின்ற தோர்பொருளைக் காண்கின்ற யோகிகளே<br>காண்கின்றார் காட்சியறக் கண்ணுதலைக் – காண்கின்றார்<br>காண்பானும் காணப் படுபொருளும் அன்றியே<br>காண்கையினால் கண்டனரே காண். | 148 |
| 28. | பேசாமை பெற்றதனில் பேசாமை கண்டனரைப்<br>பேசாமை செய்யும் பெரும்பெருமான் – பேசாதே<br>எண்ணொன்றும் வண்ணம் இருக்கின்ற யோகிகள்பால்<br>உள்நின்றும் போகான் உளன். | 150 |
| 29. | ஓட்டற்று நின்ற உணர்வு பதிமுட்டித்<br>தேட்டற்று நின்ற இடம்சிவமாம் – நாட்டுற்று<br>நாடும் பொருளனைத்தும் நானா விதமாகத்<br>தேடுமிடம் அன்று சிவம். | 153 |

| | | |
|---|---|---|
| 30. | பற்றினுட் பற்றைத் துடைப்பதொரு பற்றறிந்து<br>பற்றிப் பரிந்திருந்து பார்க்கின்ற – பற்றதனைப்<br>பற்றிவிடில் அந்நிலையே தானே பரமாகும்<br>மற்றுமிது சொன்னேன் மதி. | 157 |
| 31. | உணராதே யாதும் உறங்காதே உள்ளிப்<br>புணராதே நீபொதுவே நிற்கின் – உணர்வரிய<br>காலங்கள் செல்லாத காலத் துடன்இருத்தி<br>காலங்கள் மூன்றினையும் கண்டு. | 161 |
| 32. | அறிவறிவாய் நிற்கில் அறிவுபல வாமென்(று)<br>அறிவின் அறிவவிழ்த்துக் கொண்டவ்–வறிவினராய்<br>வாழ்ந்திருப்பர் நீத்தவர்கள் மானுடரின் மாணவக!<br>தாழ்ந்தமணி நாவேபோல் தான். | 164 |
| 33. | ஓசையெலாம் அற்றால் ஒலிக்கும் திருச்சிலம்பின்<br>ஓசை வழியேசென் றொத்தொடுங்கில் – ஓசையினில்<br>அந்தத்தா னத்தான் அரிவையுடன் அம்பலத்தே<br>வந்தொத்தா னத்தான் மகிழ்ந்து. | 166 |
| 34. | சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் என்றமையால்<br>சார்புணர்தல் தானே தியானமுமாம் – சார்பு<br>கெடஒழுகின் நல்ல சமாதியுமாம் கேதப்<br>படவருவ தில்லைவினைப் பற்று. | 167 |
| 35. | அன்றிவரும் ஐம்புலனும் நீயும் அசையாதே<br>நின்றபடி யேநிற்க முன்னிற்கும் – சென்று<br>கருதுவதன் முன்னம் கருத்தழியப் பாயும்<br>ஒருமகள்தன் கேள்வன் உனக்கு. | 173 |
| 36. | உண்டெனில் உண்டாகும் இல்லாமை; இல்லைஎனில்<br>உண்டாகும்; ஆனமையின் ஓரிரண்டாம்; – உண்டில்லை<br>என்னும் இவைதவிர்ந்த இன்பத்தை எய்தும்வகை<br>உள்ளில்அவன், உன்னுடனே ஆம். | 176 |

| | II. உபாய இயல் 3. சிவஞானப்பகுதி (37-88) | |
|---|---|---|
| 37. | தூல உடம்பாய முப்பத்தோர் தத்துவமும்<br>மூல உடம்பாம் முதல்நான்கும் – மேலைச்<br>சிவமாம் பரிசினையும் தேர்ந்துணர்ந்தார் சேர்ந்த<br>பவமாம் பரிசறுப்பார் பார். | 179 |
| 38. | எத்தனையோ தத்துவங்கள் எவ்வெவர் கோட்பாடுடைய<br>அத்தனையும் சென்றங்கு அளவாதே – சித்தம்எனும்<br>தூதுவனைப் போக்கிப்போய்த் தூக்கற்ற சோதிதனில்<br>பாதிதனைக் கும்பிடலாம் பார். | 181 |
| 39. | சாம்பொழுதும் ஏதும் சலமில்லை; செத்தாற்போல்<br>ஆம்பொழுதி லேஅடைய ஆசையறில் – சோம்புதற்குச்<br>சொல்லும் துணையாகும் சொல்லாத தூய்நெறிக்கண்<br>செல்லும் துணையாகும் சென்று. | 183 |
| 40. | வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்றமையால்<br>வேண்டின்அஃ தொன்றுமே வேண்டுவது – வேண்டின்அது<br>வேண்டாமை வேண்டவரும் என்றமையால் வேண்டிடுக<br>வேண்டாமை வேண்டுமவன் பால். | 185 |
| 41. | அரண உணர்வுதனில் அவ்வுணர்வை மாற்றில்<br>கரணமும் காலும் கைகூடும் – புரணமது<br>கூடாமை யுங்கூடும் கூடுதலும் கூட்டினுக்கு<br>வாடாமை யுங்கூடும் வந்து. | 187 |
| 42. | இன்றிங் கசேதனமாம் இவ்வினைகள் ஓரிரண்டும்<br>சென்று தொடருமவன் சென்றிடத்தே – என்றும் தான்<br>தீதுறுவன் ஆனால் சிவபதிதான் கைவிடுமோ<br>மாதொருகூ றல்லனோ மற்று. | 189 |
| 43. | அநாதி சிவனுடைமை யாலெவையும் ஆங்கே<br>அநாதியெனப் பெற்ற அணுவை – அநாதியே<br>ஆர்த்த துயரகல அம்பிகையோ டெவ்விடத்தும்<br>காத்த லவன்கடனே காண். | 190 |

| | | |
|---|---|---|
| 44. | தம்மில் சிவலிங்கம் கண்டதனைத் தாம்வணங்கித்<br>தம்மன்பால் மஞ்சனநீர் தாமாட்டித் – தம்மையொரு<br>பூவாகப் பூவழியா மற்கொடுத்துப் பூசித்தால்<br>ஓவாமை யன்றே உடல். | 192 |
| 45. | தன்னைப் பெறுவதின்மேல் பேறில்லை தான்என்றும்<br>தன்னைத்தான் பெற்றவன்தான் ஆரென்னில் – தன்னாலே<br>எல்லாந்தன் உட்கொண்டு கொண்டதனைக் கொள்ளாதே<br>எல்லாமாய் நிற்கும் இவன். | 194 |
| 46. | துன்பமாம் எல்லாம் பரவசனாய்த் தான்துவளில்<br>இன்பமாம் தன்வசனாய்த் தானிருக்கில் – என்பதனால்<br>நின்வசனா யேஇருக்கின் நின்னுடனாம் நேரிழையாள்<br>தன்வசனா யேயிருப்பன் தாள். | 196 |
| 47. | செத்தாரே கெட்டார் கரணங்கள் சேர்ந்ததனோ (டு)<br>ஒத்தாரே யோகபர ரானவர்கள் – எத்தாலும்<br>ஆராத அக்கரணத் தாா்ப்புண்டிங் கல்லாதார்<br>பேராமற் செல்வரதன் பின். | 198 |
| 48. | கண்ணும் கருத்தும் கடந்ததொரு பேறேயும்<br>கண்ணும் கருத்தும் களிகூர – நண்ணி<br>வடமடக்கி நிற்கும் வடவித்தே போல<br>உடனடக்கி நிற்பர்கள்காண் உற்று. | 200 |
| 49. | வானகமும் மண்ணகமும் ஆய்நிறைந்த வான்பொருளை<br>ஊனகத்தே உன்னுமதென் என்றனையேல் – ஏனகத்து<br>வாதனையே மாற்றும் வகையதுவே மண்முதலாம்<br>ஆதனமே அன்றோ அதற்கு. | 201 |
| 50. | கல்லில் கமரில் கதிர்வாளில் சாணையினில்<br>வல்லுப் பலகையினில் வாதனையைச் – சொல்லும்<br>அகமார்க்கத் தாலவர்கள் மாற்றினர்காண் ஐயா!<br>சகமார்க்கத் தாலன்றே தான். | 202 |
| 51. | உள்ளும் புறம்பும் நினைப்பொழியில் உன்னிடையே<br>வள்ளல் எழுந்தருளும் மாதினொடும் – தெள்ளி<br>அறிந்தொழிவாய் அன்றியே அன்புடைமை ஆயின்<br>செறிந் தொழிவாய் ஏதேனும் செய். | 205 |

| | | |
|---|---|---|
| 52. | கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை என்றமையால்<br>கண்ணப்பன் ஒப்பதோர் அன்பதனைக் – கண்ணப்பர்<br>தாமறிதல் காளத்தி யாரறிதல் அல்லதுமற்<br>றாரறியும் அன்பன் றது. | 207 |
| 53. | அவிழ்ந்த துணியில் அவிழ்ந்த அவிழை<br>அவிழ்ந்த மனத்தால் அவிழ்க்க – அவிழ்ந்தசடை<br>வேந்தனார்க் கின்னமுத மாயிற்றே மெய்யன்பிற்<br>சேந்தனார் செய்த செயல் | 209 |
| 54. | சுரந்த திருமுலைக்கே துய்ய சிவஞானம்<br>சுரந்துண்டார் பிள்ளைஎனச் சொல்லச்–சுரந்த<br>தனமுடையாள் தென்பாண்டி மாதேவி தாழ்ந்த<br>மனமுடையாள் அன்பிருந்த ஆறு. | 211 |
| 55. | அன்பேஎன் அன்பேஎன் றன்பா லழுதரற்றி<br>அன்பேயன் பாக,அறி வழியும் – அன்பன்றித்<br>தீர்த்தம்தி யானம் சிவார்ச்சனைகள் செய்யுமவை<br>சாற்றும் பழமன்றே தான். | 212 |
| 56. | எல்லார் அறிவுகளின் தாற்பரியம் என்னறிவு<br>செல்லும் இடத்தளவும் சென்றறிந்தேன் – வல்லபடி<br>வாதனையை மாற்றும் வகையிதுவே மற்றவற்றுள்<br>ஏதமறக் கண்ட விதம். | 214 |
| 57. | வித்தும்அதன் அங்குரமும் போன்றிருக்கும் மெய்ஞ்ஞானம்<br>வித்தும்அதன் அங்குரமும் மெய்உணரில் – வித்ததனில்<br>காணாமை யால்அதனைக் கைவிடுவர் கண்டவர்கள்<br>பேணாமை யாலற்றார் பேறு. | 216 |
| 58. | ஒன்றன் றிரண்டன் றுளதன் றிலதன்று<br>நன்றன்று தீதன்று நானன்று – நின்ற<br>நிலையன்று நீயன்று நின்னறிவு மன்று<br>தலையன் றடியன்று தான். | 218 |
| 59. | செய்யாச் செயலையவன் செய்யாமை கண்டுதனைச்<br>செய்யாச் செயலிற் செலுத்தினால் – எய்யாதே<br>மாணவக! அப்பொழுதே வாஞ்சைக் கொடிவளர்க்கும்<br>ஆணவமும் இத்தால் அறி. | 219 |

| | | |
|---|---|---|
| 60. | ஏதேனும் காலமுமாம் ஏதேனும் தேசமுமாம்<br>ஏதேனும் திக்கா சனமுமாம் – ஏதேனும்<br>செய்வா னொருவனுமாம் செய்யாச் செயலதனைச்<br>செய்யாமை செய்யும் பொழுது. | 221 |
| 61. | செய்தற் கரிய செயல் பலவும் செய்துசில<br>செய்தற் கரியதனை எய்தினர்கள் – ஐயோநாம்<br>செய்யாமை செய்து செயலறுக்க லாயிருக்கச்<br>செய்யாமை செய்யாத வாறு. | 222 |
| 62. | இப்பொருள்கள் யாதேனும் ஏதெனினும் ஒன்றுசெய்தல்<br>எப்பொருளும் செய்யா தொழிந்திருத்தல் – மெய்ப்பொருளைக்<br>கண்டிருத்தல் செய்யாதே கண்ட மனிதரெல்லாம்<br>உண்டிருப்ப தென்னோ உரை. | 224 |
| 63. | வீட்டிலே சென்று வினையொழிந்து நின்றிடிலென்<br>நாட்டிலே நல்வினைகள் செய்திடிலென் – கூட்டில்வாள்<br>சாத்தியே நின்றிலையேல் தக்கனார் வேள்விசெய்த<br>மாத்திரமே யாம்கண்டாய் வந்து. | 226 |
| 64. | சிவன்முதலே அன்றி முதலில்லை என்றும்<br>சிவனுடைய தென்னறிவ தென்றும் – சிவனவன(து)<br>என்செயல தாகின்ற தென்றும் இவையிற்றைத்<br>தன்செயலாக் கொள்ளாமை தான். | 227 |
| 65. | இன்றிச் சமயத்தி னல்லதுமற் றேழையுடன்<br>ஒன்றுசொலி மன்றத்து நின்றவரார் – இன்றிங்கே<br>அங்கம் உயிர்பெறவே பாடும் அடியவரார்<br>எங்குமிலை கண்டாய் இது. | 230 |
| 66. | விரிந்தும் குவிந்தும் விழுங்குவர்கள் மீண்டும்<br>தெரிந்தும் தெரியாது நிற்பர் – தெரிந்தும்<br>தெரியாது நிற்கின்ற சேயிழைபால் என்றும்<br>பிரியாது நின்றவனைப் பெற்று. | 232 |

| | | |
|---|---|---|
| 67. | ஆதனமும் ஆதனியும் ஆய்நிறைந்து நின்றவனைச்<br>சேதனனைக் கொண்டே தெளிவுற்றுச் – சேதனனைச்<br>சேதனனி லேசெலுத்திச் சிற்பரத்த ராயிருப்பர்<br>ஏதமறக் கண்டவர்கள் இன்று. | 234 |
| 68. | தாமடங்க இந்தத் தலமடங்கும் தாபதர்கள்<br>தாமுணரில் இந்தத் தலமுணரும் தாமுனியில்<br>பூமடந்தை தங்காள் புகழ்மடந்தை போயகலும்<br>நாமடந்தை நில்லாள் நயந்து. | 237 |
| 69. | துரியம் கடந்தசுடர்த் தோகையுடன் என்றும்<br>பிரியாதே நிற்கின்ற பெம்மான் – துரியத்தைச்<br>சாக்கிரத்தே செய்தருளித் தான்செய்யும் தன்மைகளும்<br>ஆக்கியிடும் அன்பர்க் கவன். | 238 |
| 70. | ஓடம் சிவிகை உலவாக் கிழிஅடைக்கப்<br>பாடல் பனைதாளம் பாலைநெய்தல் – ஏடெதிர்வெப்<br>பென்புக் குயிர்கொடுத்தல் ஈங்கிவைதாம் ஓங்குபுகழ்த்<br>தென்புகலி வேந்தன் செயல். | 239 |
| 71. | கொல்கரியின் நீற்றறையின் நஞ்சின் கொலைதவிர்த்தல்<br>கல்லே மிதப்பாய்க் கடல்நீந்தல் – நல்ல<br>மருவார் மறைக்காட்டில் வாசல்திறப் பித்தல்<br>திருவாமூ ராளி செயல். | 239 |
| 72. | மோக மறுத்திடில்நாம் முத்தி கொடுப்பதென<br>ஆகமங்கள் சொன்ன அவர்தம்மைத் – தோகையர்பால்<br>தூதாகப் போகவிடும் வன்தொண்டன் தொண்டுகளை<br>ஏதாகச் சொல்வே னியான். | 239 |
| 73. | பாய்பரியொன் றந்தப் பரமானந் தப்பரனைத்<br>தூயதிரு வாய்மலரால் சொற்செய்து – மாயக்<br>கருவாதை யாமறியா வாறுசெய்தான் கண்டாய்<br>திருவாத ஊராளும் தேன். | 240 |

| | | |
|---|---|---|
| 74. | அம்மையிலும் இம்மையிலும் அச்சம் தவிர்த்தடியார்<br>எம்மையுமாய் எங்கும் இயங்குதலால் – மெய்ம்மைச்<br>சிவயோகமே யோகம் அல்லாத யோகம்<br>அவயோக மென்றே அறி. | 242 |
| 75. | மன்னனருள் எவ்வண்ணம் மானுடர்பால் மாணவக!<br>அன்ன வகைய தரனருளும் – என்னில்<br>அடியவரே எல்லாரும் ஆங்கவர்தாம் ஒப்பில்<br>அடியவரே எல்லாம் அறி. | 244 |
| 76. | உடம்புடைய யோகிகள்தாம் உற்றசிற் றின்பம்<br>அடங்கத்தம் பேரின்பத்து ஆக்கில் – தொடங்கி<br>முளைப்பது மொன்றில்லை முடிவது மொன்றில்லை<br>இளைப்பது மொன்றில்லை இவர். | 245 |
| 77. | பேரின்ப மான பிரமக் கிழத்தியுடன்<br>ஓரின்பத் துள்ளானை உள்ளபடி – பேரின்பம்<br>கண்டவரே கண்டார்; கடலுயிர்த்த இன்னமுதம்<br>உண்டவரே உண்டார் சுவை. | 246 |
| 78. | நம்கையினால் நாம்அனைத்தும் செய்தாற்போல் நாடனைத்தும்<br>நங்கையினால் செய்தளிக்கும் நாயகனும் – நங்கையினும்<br>நம்பியாய்த் தானடுவே நாட்டப் பெறுமிதுகாண்<br>எம்பெருமா னார்தம் இயல்பு. | 248 |
| 79. | பொன்நிறம் கட்டியினும் பூணினும் நின்றாற்போல்<br>அந்நிறம் அண்ணலும் அம்பிகையும் – செந்நிறத்தள்<br>எந்நிறத்த ளாயிருப்பள் எங்கள் சிவபதியும்<br>அந்நிறத்த னாயிருப்பன் ஆங்கு. | 249 |
| 80. | தாரத்தோ டொன்றாவர் தாரத்தோர் கூறாவர்<br>தாரத்தோ டெங்கும் தலைநிற்பர் – தாரத்தின்<br>நாதாந்தத் தேயிருப்பர் நால்தானத் தேயிருப்பர்<br>வேதாந்தத் தேஇருப்பர் வேறு. | 250 |
| 81. | ஒன்றுரைத்த தொன்றுரையாச் சாத்திரங்கள் ஒன்றாக<br>நின்றுரைத்து நிச்சயிக்க மாட்டாவால் – இன்றுரைக்க<br>என்னால் இயன்றிடுமோ என்போல்வார் ஏதேனும்<br>சொன்னால்தான் ஏறுமோ சொல். | 252 |

| | | |
|---|---|---|
| 82. | யாதேனும் காரணத்தால் எவ்வுலகில் எத்திறமும்<br>மாதேயும் பாகன் இலச்சினையே – ஆதலினால்<br>பேதமே செய்வாய் அபேதமே செய்திடுவாய்<br>பேதாபே தஞ்செய்வாய் பின். | 253 |
| 83. | நின்றபடி நின்றவர்கட் கன்றி நிறந்தெரியா<br>மன்றினுணின் றாடல் மகிழ்ந்தானும் – சென்றுடனே<br>எண்ணுறும்ஐம் பூதமுதல் எட்டுருவாய் நின்றானும்<br>பெண்ணுறநின் றாடும் பிரான். | 256 |
| 84. | சிவமே சிவமாக யானினைந்தாற் போலச்<br>சிவமாகி யேயிருப்ப தன்றிச் – சிவமென்(று)<br>உணர்வாரு மங்கே உணர்வழியச் சென்று<br>புணர்வாரு முண்டோ புவி. | 257 |
| 85. | அதுஇது என்றும் அவன்நானே என்றும்<br>அதுநீயே ஆகின்றாய் என்றும் – அதுவானேன்<br>என்றும் தமையுணர்ந்தா ரெல்லாமி ரண்டாக<br>ஒன்றாகச் சொல்வரோ உற்று. | 258 |
| 86. | ஈறாகி அங்கே முதல்ஒன்றாய் ஈங்கிரண்டாய்<br>மாறாத எண்வகையாய் மற்றிவற்றின் – வேறாய்<br>உடனாய் இருக்கும் உருவுடைமை என்றும்<br>கடனாய் இருக்கின்றான் காண். | 261 |
| 87. | உன்னுதரத் தேகிடந்த கீடம் உறுவதெல்லாம்<br>உன்னுடைய தென்னாய்நீ உற்றனையோ – மன்னுயிர்கள்<br>அவ்வகையே காண்இங் கழிவதுவும் ஆவதுவும்<br>செவ்வகையே நின்றசிவன் பால். | 263 |
| 88. | அவனே அவனி முதலாயி னானும்<br>அவனே அறிவாய்நின் றானும் – அவனேகாண்<br>ஆணாகிப் பெண்ணாய் அலியாகி நின்றானும்<br>காணாமை நின்றானும் கண்டு. | 264 |

| | | |
|---|---|---|
| | III. குருமரபியல் 1. ஆசாரிய நிட்டைப்பகுதி (89–93) | |
| 89. | இன்றுதான் நீயென்னைக் கண்டிருந்தும் கண்டாயோ<br>அன்றுதான் நானுன்னைக் கண்டேனோ – என்றால்<br>அருமாயை ஈன்றவள்தன் பங்கனையார் காண்பார்<br>பெருமாயைச் சூழல் பிழைத்து. | 267 |
| 90. | கடலலைத்தே ஆடுதற்குக் கைவந்து நின்றும்<br>கடலளக்க வாராதால் போலப் – படியில்<br>அருத்திசெய்த அன்பரைவந் தாண்டதுவு மெல்லாம்<br>கருத்துக்குச் சேயனாய்க் காண். | 269 |
| 91. | சிவனெனவே தேறினன்யான் என்றமையால் இன்றும்<br>சிவன்அவனி வந்தபடி செப்பில் – அவனிதனில்<br>உப்பெனவே கூர்மை உருச்செய்யக் கண்டமையால்<br>அப்படியே கண்டாய் அவன். | 270 |
| 92. | அவனிவனாய் நின்ற தவனருளா லல்ல(து)<br>எவனவனாய் நிற்கின்ற தேழாய் – அவனிதனில்<br>தோன்றுமரப் புல்லூரி தொல்லுலகில் அம்மரமாய்<br>ஈன்றிடுமோ சொல்லாய் இது. | 272 |
| 93. | முத்தி முதற்கொடிக்கே மோகக் கொடிபடர்ந்(து)<br>அத்தி பழுத்த தருளென்னும் – கத்தியினால்<br>மோகக் கொடியறுக்க முத்திப் பழம்பழுக்கும்<br>ஏகக் கொடிஎழுங்காண் இன்று. | 274 |
| | III. குருமரபியல் 2. சிறப்புப்பகுதி (94–100) | |
| 94. | அகளத்தில் ஆனந்தத் தானந்தி யாயே<br>சகளத்தில் தையலுடன் தோன்றி – நிகளத்தைப்<br>போக்குவதும் செய்தான்தன் பொன்னடிஎன் புன்தலைமேல்<br>ஆக்குவதும் செய்தான் அவன். | 276 |
| 95. | குற்றமறுத் தென்னையாட் கொண்டருளித் தொண்டனேன்<br>உற்ற தியானத் துடனுறைவர் – முற்றவரின்<br>மாட்சியுமாய் நிற்பரியான் மற்றொன்றைக் கண்டிடினக்<br>காட்சியுமாய் நிற்பார் கலந்து. | 277 |

| | | |
|---|---|---|
| 96. | ஆளுடையான் எந்தரமும் ஆளுடையா னேஅறியும்<br>தாளுடையான் தொண்டர் தலைக்காவல் – நாளும்<br>திருவியலூ ராளும் சிவயோகி இன்றென்<br>வருவிசையை மாற்றினான் வந்து. | 278 |
| 97. | தூலத் தடுத்த பளிங்கின் துளக்கமெனத்<br>தூலத்தே நின்று துளங்காமல் – காலத்தால்<br>தாளைத்தந் தென்பிறவித் தாளை யறவிழித்தார்க்(கு)<br>ஆளன்றி என்மா றதற்கு. | 280 |
| 98. | இக்கணமே முத்தியினை எய்திடினு மியானினைந்த<br>அக்கணமே ஆனந்தம் தந்திடினும் – நற்கணத்தார்<br>நாயகற்கும் நாயகிக்கும் நானடிமை எப்பொழுதும்<br>ஆயிருத்தல் அன்றியிலே னியான். | 281 |
| 99. | என்னை உடையவன்வந் தென்னுடனாய் என்னளவில்<br>என்னையுந்தன் ஆளாகக் கொள்ளுதலால் – என்னை<br>அறியப்பெற் றேனறிந்த அன்பருக்கே ஆளாய்ச்<br>செறியப்பெற் றேன்குழுவிற் சென்று. | 282 |
| 100. | சிந்தையிலும் என்தன் சிரத்தினிலும் சேரும்வகை<br>வந்தவனை மண்ணிடைநாம் வாராமல் – தந்தவனை<br>மாதினுடன் எத்திறமும் வாழ்ந்திருக்க என்பதலால்<br>ஏதுசொலி வாழ்த்துவேன் இன்று. | 284 |
| | செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை | 286 |

உ
*சிவமயம்*
*திருச்சிற்றம்பலம்*

# சைவ சித்தாந்த சாத்திரங்கள்

## (மெய்கண்ட சாத்திரங்கள்)

## II. திருக்களிற்றுப்படியார்

### வழிபாட்டுக் கருத்தரங்கம்

### 27.10.2018, 28.10.2018 - சனி, ஞாயிறு

நல்லசிவ தன்மத்தால் நல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தால் நானழிய – வல்லதனால்
ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படுங்காண்
ஆரேனும் காணா அரன். **- திருக்களிற்றுப்படியார்-15**

## பதிப்புரை

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன்அடி சேரா தார். – திருக்குறள் (10)

**1. உயிரின் நோக்கம் / இலட்சியம்** - வீடுபேறு, முத்தி, மோட்சம். (சொர்க்க நரகங்கள் அல்ல)

**2. எடுத்துக்கொண்ட கொள்கைகள்**

அ) எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும் மன்னியசீர்ச் சங்கரன் தாள் மறவாமை.

ஆ) யாதொரு தெய்வங் கொண்டீர்; அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகர் தாம் வருவார் எனத் தெளிதலும்/ உறுதிபட நிற்றலும்.

இ) பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும், மாதொரு பாகர் மலர்த்தாள் மறப்பிலாமை.

ஈ) சிவத்தைத் தவிர மற்றொரு தெய்வத்தைக் கனவிலும் நினையாதிருத்தல்.

உ) “ஞாலம் நின்புகழே மிக வேண்டும் தென் ஆலவாயில் உறையும் எம் ஆதியே” என்று எந்நேரமும் சிவன் புகழையே பாடிக்கொண்டிருத்தல். நம் புகழைப் பாடவோ, பரப்பவோ முயற்சி செய்யாதிருத்தல்.

ஊ) தம்மைத் தாம் முற்றிலும் மறத்தல்.

**3. வகுத்துக்கொண்ட நெறிகள்**

1) சிவபூசை – விசேட தீக்கை பெற்றுத் தினமும் சூரிய உதயத்தில் ஆன்மார்த்த படிகலிங்க மூர்த்திக்கு ஆனைந்துத் திருமஞ்சனத்துடன் 1008 போற்றி மலர் வழிபாடு.

2) எழில் ஞானபூசை – திருமுறைகளையும், சாத்திரங்களையும் ஓதுதல், ஓதுவித்தல்.

3) சிவாலயத் திருப்பணிகள் - அன்றாட, வாராந்தர, மாதந்தர, வருடாந்தர பெருஞ்சாந்திப் பெருவிழாக்கள் நடத்த உதவி செய்தல் – நல்விழாப் பொலிவு காணுதல் – காண்பித்தல்.

**"சிவன் கழல் போற்றி நிற்கும் சிந்தையின் நிறைவே செல்வம்" என வாழும் அடியார் பெருமக்களே, வணக்கம்.**

## தோற்றுவாய்:-

தொன்மைச் சமயமாக விளங்குவது நம் சைவ சமயமாகும். இச்சமயத்தின் முழுமுதற் பொருளாக விளங்கும் சிவபெருமான் பிறசமயத்தவராலும் அம்முதன்மை பிறழாது போற்றப்பெறுவோர் ஆவர். 'பிறவா யாக்கைப் பெரியோன்', ' நுதல்விழி நாட்டத்து இறையோன் முதலா', 'பெரியோன் தருக' என வருவன காண்க. இவ்வாறு போற்றப் பெறுதற்குரிய சிவபரம் பொருளை வழிபடும் சமயத்திற்கு அதன் உண்மைகளை விளக்குதற் பொருட்டு எத்துணையோ நூல்கள் எழுந்துள்ளன. அவற்றுள் பதினான்கு நூல்கள் குறிப்பிடத்தக்கன. அவை திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞான சித்தியார், இருபா இருப.்.து, சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் ப.்.றொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம், உண்மை விளக்கம் என்பன. இவற்றுள், திருக்கடவூர் உய்யவந்த தேவரால் அருளிச் செய்யப்பெற்றதே திருக்களிற்றுப் படியாராகும். அந்நூலின் விளக்கவுரை வெளியிடத் திருவருள் கூட்டுவித்த நிலையில் பதிப்புரை எழுத முனையும்போது பதிப்பாசிரியரின் சித்தாந்த ஆசிரியர் பேராசிரியர் **கு. சுந்தரமூர்த்தி** அவர்கள் எழுதிய இந்த ஆராய்ச்சி முன்னுரை கிடைத்தது. அதையே பதிப்பித்து மகிழ்கிறோம்.

## திருக்களிற்றுப்படியார்:-

இப்பெயர் காரணப் பெயராகும். இந்நூலாசிரியர் தாழ்ந்த இனத்தவர் ஆதலின் இவர்தம் நூலும் கொள்ளற் பாலதன்று என்று சிலர் கூற, 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' எனும் தகுதி உடைய சிலர், இந்நூலை நடராசப்பெருமான் திருவடிக் கீழ் இருக்கும் பஞ்சாக்கரப் படியில் வைத்தனர். அப்படியில் அமைந்திருக்கும் கல் யானை இந்நூலைத் தன் துதிக்கையால் எடுத்துப் பெருமானின் திருவடிக்கீழ் வைக்கப் பின் அதன் பெருமையுணர்ந்து அனைவரும் போற்றினர். பஞ்சாக்கரப்படியின் இருமருங்கும் கல்லானை நிற்றலின், அதனைத் திருக்களிற்றுப்படி என்பர். (களிறு - யானை). அதனால் இந்நூலும் இப்பெயர் பெற்றது. திருவுந்தியாரைப் போன்றே இந்நூலும் முன்னும் பின்னும் அடைமொழி கொடுத்துச் சிறப்பிக்கப்பெற்றுள்ளது. தத்துவராயர் என்பார் தாம் தொகுத்த பெருந்திரட்டு என்ற நூலில் இந்நூற்கண் உள்ள 3 பாடல்களைச் சேர்த்துள்ளார். அவர் ஏனைய சித்தாந்த நூல்களில் உள்ள பாடல்களில் எதனையும் தம் நூற்கண் எடுத்தக் கொள்ளவில்லை. அதனால் அவர் தம் நோக்கில் இந்நூற்குளதாய பெருமை விளங்கும். எனவே இந்நூல் திருவருள் மேம்பாடு உடையது என்பது புலனாகின்றது.

## நூற் சிறப்பு:-

**திருவுந்தியாருக்கு வழி நூலாக அமைந்த சிறப்புடையது. முதல் நூலில் அரிதாகவும் நுட்பமாகவும் கூறப்பட்டிருக்கும் கருத்துக்களை இந்நூல் தெளிவாகவும் தக்க மேற்கோளுடனும் எடுத்துக் காட்டி விளக்குகின்றது**. முன்னோர் மொழிபொருளைப் பொன்னேபோல் போற்றிச் செல்லும் சிறப்புடையது.

## நுவலும் பொருள்:-

### இறையருளும் குருவருளும் :

சிவபெருமானே உயிர்கட்குத் தாயும் தந்தையும் ஆவர். உயிர்கட்கு அருளுதற் பொருட்டு அத்திருக் கோலத்துடனேயே வந்தருளுவர். எல்லா உலகுக்கும் அப்பாற்பட்டவராயினும் உயிர்கள் மாட்டு வைத்த கருணையால் அப்பொருள்கள் அனைத்திலும் கலந்து நிற்பர். ஆயினும் அவற்றில் தோய்விலர். அத்தகைய பரம்பொருளைத் தம்மை ஆட்கொண்டருளும் குருமூர்த்திகளின் வாயிலாகவே அறிதற்கியலும்.அவ்வறிவின் முதிர்ச்சியால் தம்மறிவில் அச்சிவபரம்பொருள் விளங்கக் காண்பர். அந்நிலையில் தம்மையும் மறந்து அவ்விறைவனோடு பொருந்தி நிற்பின் அப்பெருமானின் தன்மையை அடைவர்.

உயிர்கள் அனைத்தையும் இறைவன் தானும் தன் தையலுமாய் அருள் உருக்கொண்டு ஆட்கொள்ளவில்லையேல் ஆகமங்களும் இல்லை, அறுசமயங்களும் இல்லை, யோகமும் இல்லை, அதன் பயனாகிய உணர்வும் இல்லை. மெய்ந்நூற் பொருள்களைக் குருவருள் வழிப் பெறுதலே பயன்படுவதாகும். **தாமாகப் படித்துப் பயன் பெறுதல் என்பது கடல்நீரைத் தாமாக முகந்து குடிப்பது போலாகும். குருவருள் வழிப்பெறுதல் மேகத்தால் அந்நீர் முகக்கப்பட்டுப் பின் மழையாய்ப்பொழிய அந்நீரைக் குடிப்பது போலாகும்**. பசுவின் மலம் ஏனைய மாசுகளைப் போக்குவது போல இறைவனும் குருவாக உருக்கொண்டு வந்தே ஏனைய உயிர்களின் வினைவயத்தாலாய உடம்புகளை அழிப்பன். குருமூர்த்தியாக எழுந்தருளியிருக்கும் இறைவனைக் கொண்டே உயிர் தனது வினைகளைப் போக்கிக் கொளல் வேண்டும். அவ்வாறு போக்கிக்கொண்ட உயிர் அவன் யாண்டும் நீக்கமற நிற்கும் நிலையை அனுபவத்தால் கண்டு மகிழும். இறைவனை அவன் ஒன்றியிருக்கும் பொருளின் அடையாளத்தைக் கொண்டுதான் அறிய முடியும். அதுவன்றிஅவனுக்கெனத் தனித்த ஓர் அடையாளம் இல்லை. ஆதலின் அவனுக்கு ஒப்பாக யாதொரு பொருளுமில்லை. அவ்வருள் வழி நிற்கும் தவமுடையார் தம் ஒப்பின்மை கொண்டு இதனையும் அறிய இயலுமாதலின் அவரே இதற்குச்சான்றாவர். **இறையுணர்வோடு அவனைக்காண முயலின் அவன் தெளிவாக அறிய நிற்பன். தன் உணர்வோடு காணமுயலின் அவன் காணலாகான்**.

இறைவன் உயிர்களால் அறியப்படும் பொருள் எனின் உயிர்களால் அறியப்படும் பொருளெல்லாம் அழியும் தன்மைத் தாதலின் அவனும் அழியும் தன்மையன் ஆவன். அறியப்படாத பொருளெனின் அவனைப் பற்றிக் கட்டுரை இன்றாம். பின் எங்ஙனம் கொள்வதெனில் அவன், உயிர் அறிவாலும், (பதி ஞானத்தாலும்) உலகு, அகக் கருவிகள் முதலியவற்றின் வாயிலாக அறியும் அறிவாலும் (பாச ஞானத்தாலும்) அறியப்படும் பொருளாகான் என்பதும் அவனருளையே கண்ணாகக் கொண்டு காண்பார்க்கு அறியும்பொருள் அவன் என்பதும் அறியத் தக்கதாம். சிவபரம்பொருள் உயிரறிவில் பிரிவின்றி இயைந்து நிற்றலின் ஒன்று என்றலுமாகாது, இரண்டு என்றலுமாகாது.

கண்ணுக்குப் புலனாகாமையின் உளதென்றும் சொல்ல ஒண்ணாது. மெய்யுணர்வுடையார் தம் உள்ளக்கிழியில் உருவாய் நிற்றலின் இல்லையென்றும் சொல்ல வொண்ணாது. உயிர்கள் செய்த வினைக்கேற்ப அப்பயனை ஊட்டுதலின் அவன் செயலை நன்றென்றலும் ஆகாது. தீதென்றலும் ஆகாது, அப்பரம் பொருள் உயிரும் ஆகாது, உயிரைப் பணித்து நிற்கும் தளையும் ஆகாது, முதலுமாகாது, முடிவுமாகாது. நன்மை செய்தோரைக் காத்தும், தீமை செய்தோரை ஒறுத்து அதனால் அத்தீமையினின்றும் காத்தும், அரசன் ஆணை செலுத்துவதைப் போன்றே இறைவனும் உயிர்களின் செயலுக்கு ஏற்ப இன்ப உலகிலும், நிரைய உலகிலும் செலுத்தி வினைமாசு நீங்குமாறு செய்வன்.

நமது கையால் நம்செயல்களைச் செய்தல் போல இறைவனும் தன் அருட்சத்தியால் ஐந்தொழில்களையும் செய்வன். அந்நிலையில் ஒன்றாவன். அவ்வைந் தொழில்களையும் தன் ஆணை வழி நிற்கும் ஐவரைக்கொண்டு செய்தலின் அவர்கட்குத் தலைமையுமாவன். கட்டியாக இருந்த பொன் அணியாக மாறுகின்ற பொழுதும் அதன் நிறம் வேறுபடுவதில்லை. அதைப்போன்றே இறைவனும் தந்நிலையில் இருக்கின்ற பொழுதும் அருட்சத்தியுடன் ஒன்றியிருந்து அருள்செய்கின்ற பொழுதும் வேறுபடுவதில்லை.

உலகிலுள்ள பொருள்கள் அனைத்தும் அம்மையப்பரின் வடிவங்களே. அங்ஙனமாக உயிர்க்கும் இறைவனுக்கும் உளதாகும் இயைபு ஒன்றுபட்டது என்றோ, இரண்டுபட்டது என்றோ, ஒன்றும் இரண்டு மற்றது என்றோ எங்ஙனம் கூற இயலும்? இறைவன் ஐம்பெரும் பூதமாகவும், எண்வகை வடிவினனாகவும், பெண்ணுற நிற்பனவாகவும் இருப்பன். தம் செயலற்றுத் தம் அந்தவர்க்கே இறைவனின் உண்மை தெரியும். ஒருமையுணர்வால் காணப்பெற்ற சிவபரம் பொருளை உணர்ந்து இன்புற்று மகிழ்ந்த வண்ணம் இருப்பதன்றி வேறு செய்யத்தக்கதில்லை. உயிரும் இறைவனும் வேறு என்றும், நானே இறைவன் என்றும், இறைவன் நானாகின்றான் என்றும், நான் இறைவனானேன் என்றும் கூறுவதெல்லாம் பொருத்தமின்றாம். இறைவன் உயிரிடத்து ஒன்றாயும், வேறாயும், உடனாயும் விளங்குகின்றான் எனக் கூறுவதே பொருத்தமாகும். நம் வயிற்றிலிருக்கும் புழு அடையும் துன்பத்தை நாம்அடைவதில்லை. அதைப் போன்றே இறைவனின் அடிமையாக விளங்கும் நாம்படும் இன்ப துன்பங்களையும் இறைவன் அடைவதில்லை. இவ்வாறு அவன் அடையவில்லை யெனினும் அவனே உலகெலாம் ஆகியும் உயிர்க்கு உயிராகியும் நிற்பன். ஆண் பெண் அலியாகவும் நிற்பன். ஆசிரியரும் மாணவருமாய் உள்ளோர் ஒருவர் ஒருவரைப் பருவுடம்பால் காணினும் உயிரளவில் காணவியலவில்லை. அதைப் போன்றே இறைவன் உயிர்க்கு உயிராய் விளங்கினும் அவனைப் புறக்கண்ணால் காண்டற்கில்லை. கடல் நீராடச் செல்வார் அதன்கண் நீராடுவதல்லது அதன் ஆழ அகலங்களை அறிய இயலுவதில்லை. அதைப்போன்றே இறைவன் உயிர்களை ஆட்கொண்டிருக்கும் அமையத்தும் அவனாலாய பயனை நுகர இயலுமேயன்றி அப்பெருமானின் அளவிலாற்றல் முதலாயவற்றை முற்ற அறிதற்கில்லை. ஆயினும் இறைவன் உயிர்க்குக் குருவாக எழுந்தருளும் அமையத்து அவனை அவ்வுயிர்காண்டல் உண்டு.

'சிவனெனயானும் தேறினன் காண்க' எனும் மணிவாசகரின் திருவாக்கால் இவ்வுண்மை அறியப்படும். உயிர்கள் உய்தற்காக இறைவன் உயிர்களிடத்து இருந்து வருவதல்லது உயிர்கள் இறைவனாதலில்லை. அது மரத்தின் கண் தோன்றும் புல்லூரி மரமாகாதது போலவாம். முத்தியைப் பெறுவதற்குரிய உயிரினிடத்தே ஆணவமாகிய கொடிபடர்ந்து அதனால் உடலென்னும் பழமும் பழுத்துள்ளது. திருவருளென்னும் வாளினால் அவ்வாணவக்கொடியை அறுத்துவிடின் வீடுபேறு என்னும் பழம் உயிர்க்குக் கிடைத்துவிடும்.

## அருள்பெறுவதற்குரிய நெறி

கைம்மாறு வேண்டாத சிவதன்மத்தலோ அல்லது சிவயோகத்தாலோ அல்லது சிவஞானத்தாலோ யான் என்பது அற்றுத் திருவருளிடத்து அன்புசெயின் இறைவனும் அதன் வழியே உயிர்கட்கு அருளி உய்விப்பன்.

## சிவதன்மம் (தன்மம் - சரியை, கிரியை)

இது இருவகைப்படும். ஒன்று மென்மையான செயல்களால் இறைவனை அடைய முயல்வது. பிறிதொன்று செய்தற்கரிய வன்மையான செயல்களால் இறைவனை அடைய முயல்வது. இவற்றை முறையே மெல்வினையென்றும், வல்வினை யென்றும் கூறுவர்.

## மெல்வினை

திருக்கோவிலுக்குச் சென்று அலகிடல், மெழுகுதல், திருவிளக்கிடுதல், திருமாலை தொடுத்து அணிவித்தல், போற்றிப் புகழுதல், வணங்கல் முதலிய செயல்களைச் செய்வதும், அடியவரை வழிபடுவதும் திருவைந்தெழுத்தை ஓதுவதும் முதலான செயல்களெல்லாம் மெல்வினை யெனப்படும்.

## வல்வினை

வைரவர்க்குத் தன் மகவரிந்து ஊட்டிய சிறுத்தொண்டர் செயலும், சிவபூசைக்குத் தடையாய் இருந்த தன் தாதையின் தாளைத் தடிந்திட்ட சண்டீசர் செயலும், வயல் பிளவில் இறைவற்கென எடுத்துச்சென்ற உணவு சிந்திவிடத் தன் கழுத்தையே அறுக்கத் துணிந்த அரிவாட்டாயர் செயலும், போல்வன வல்வினை எனப்படும். இத்தகையோர் தாம் செய்யும் செயல்கள் அனைத்தும் இறைவர்க்கே உரியவாகக் கொண்டு தம் உணர்வையும் முழுமையாக அப்பெருமானிடத்து ஆட்படுத்தி விடுவதால் இவை அறமாயின. உழவும் தனுசும் வேறாகின் பயனளியாது. ஒன்றாயின் பயன்தரும். அதைப் போன்றே இச்செயல்களும் நினைவும் வேறாயின் அறன் எனப்படா, ஒன்றாய் அமைதலின் அறன் எனப்பட்டது.

## சிவயோகம்

இது இருவகைப்படும், ஒன்று ஆதாரயோகம் என்பது. பிறிதொன்று நிராதாரயோகம் என்பது. இவை இரண்டும் இறைவனின் திருவடியை அடைவிக்கும்.

## ஆதாரயோகம்

உடம்பின்கண் உள்ள ஆறு ஆதாரங்களிலும் இறைவர் தம் திருவுருவங்களை எழுந்தருளுவித்துக் கொண்டு படிப்படியாகச் சென்று பரம்பொருளில் ஒன்றுபடுவது ஆதாரயோகம் ஆகும். இவ்விடங்களில் வைத்து வழிபடும் தெய்வங்கள் திருவைந்தெழுத்தின் குறியீடாக எண்ணத்தக்கராவர். இந்நிலையைக் குருவருள் வழி நினைந்து எண்ணின் இறைவனும் அம்மையப்பராக எழுந்தருளி மலமகற்றித் தானாக மலரடிக்கீழ் வைப்பர். இவ் ஆறு இடங்களிலும் வைத்து வழிபடும் பயிற்சி மேலீட்டால் தன்னுணர்வு அழியும். அப்பொழுது இறைவனோடு ஒன்றுபடும் பேறும் கிட்டும்.

## நிராதாரயோகம்

யாண்டும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருளை அவனருளால் அவனருள்வழி நினைத்து அதனோடு ஒன்றுபடுவது நிராதாரயோகம் ஆகும். திருவருள் வயப்பட்டு அதனையே கண்ணாகக் கொண்டு காண்பவரே இறைவனைக் கண்டவர் ஆவர். தான்வேறு இறைவன்வேறு என நினைத்து வேறுபடுத்திக் காண்பவர் இறைவனைக் காணாதவர் ஆவர். இத்தகைய யோகம்கைவருவதற்கு உயிர் உலகியற்பொருள்களுடன் சார்ந்து அசைவுறுதல் இன்றி, மனஒருமை பெற்று நிற்க வேண்டும். அவ்வாறு மனம், மொழி, மெய்கள் அலைதலின்றித் திருவருளிலேயே ஒன்றும் யோகியர் தம் உள்ளத்தில் இறைவனும் நீங்காது நிற்பன். இந்நிலை கைவருவதற்குச் செய்யத்தக்க வழிவகை உண்டு. அவையாவன பொருளல்லவற்றைப் பொருளெனக் கருதி அவற்றில் மயங்கலாகாது.அவற்றால் வரும் பற்றுக்கொண்டு அவற்றில் அழுந்திவிடல் ஆகாது. நன்றாங்கால் நல்லவாக் கண்டாலும் அன்றாங்கால் அல்லற்படுதலுமாகாது தன் அறிவைப் பற்றுதல் ஆகாது. மாறாக இறையருளைப் பற்றி நிற்றலும் வேண்டும். இவை ஒன்றி நிற்றற்கு வழியாம் இவ்யோகத்தின் முதிர்ச்சியுடையார்க்கு நடராசப் பெருமானின் திருச்சிலம்பு ஓசை கேட்கும். தன் முனைப்பற்ற நிலையில் அவ்வோசைவழிச் செல்லின் அப்பெருமான் உமையுடன் தோன்றி அருளுவன். ‘சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின்’ எனத் திருவள்ளுவர் கூறியுள்ளமையால் தனக்குச் சார்பாக இருக்கும் செம்பொருளை உணர்தலே தியானமாகும். அத்தியானத்தின் வழி அகப்புறப்பற்று நீங்கின் அதுவே நிட்டை கூடுதலுமாகும். அதன் விளைவாக இறைவன் விரைந்து வந்து அருளுவன்.

## சிவஞானம்

முப்பத்தாறு தத்துவங்களையும் அவற்றின் வேறாக விளங்கும் சிவத்தையும் நன்குணர்ந்தார் பிறவியற்றவராவர். தொன்னூல் பரசமயந்தோறும் அதுவதுவே நன்னூல் எனத் தெரிந்து நாட்டும். ஆதலின் அவற்றை ஆராய்தலில் காலத்தைச் செலுத்த வேண்டுவதில்லை. உலகியற் பொருள்களில் பற்றின்றித் திருவருளில் சிந்தனை கொண்டு நிற்பின் இறைவனை அறிந்து இன்புறலாம். இவ்வகையில்

பயிற்சியுற்றார்க்கு இறக்குங்கால் வரும் கலக்கமில்லை. உடலோடு இருக்கும் பொழுதே இறந்தார் போன்ற நிலையும் கிட்டும். இதன் மேலும் மன அசைவின்றிச் சும்மா இருத்தலாகிய சுகமும் கிட்டும். திருவள்ளுவனார் வேண்டுங்கால் வேண்டும் பிறவாமையென்று கூறியுள்ளமையால் பிறவாமை யொன்றுமே வேண்டத்தக்கதாம். அப்பிறவாமையும் அவாவின்மையால் வரும் என அப்பெருமகனார் கூறியுள்ளமையால் இறைவனிடத்து அவா அறுத்தலை வேண்ட வேண்டுமென்பதாம். திருவருளில் ஒன்றுதற்காம் பேறுகிட்டிய விடத்து உலகை நோக்குதலோ அகக்கருவிகளில் தொடர்பு கொள்ளுதலோ கூடாது. கூடின் திருவருளை முழுமையாக அறிந்து இன்புறுதல் அமையாது. அதனால் உடல் எடுக்கவும் நேரும். ஞானிகட்கு வினைவயத்தால் ஒரோவழி உடல் எடுக்க நேரிடினும் அதனால் தீங்கடையார்.இறைவன் அருட்சத்தியைத் தன்னிடத்து உடையவனாதலின் கருணையால் அவர்களைக் காப்பான். உயிரினங்கள் அனைத்துமே இறைவனது அடிமையாதலின் அவ்வுயிர்களுள் ஒன்றாகியும் உள்ள ஞானியார்களைத் துயரகலக் காத்தல் உமையொரு பாகனாகிய அப்பெருமானின் கடமையாகும். உயிரடத்துத் திருவருளைக் கண்டு வணங்கி அவ்வடிவாய சிவபெருமானுக்கு அன்பையே நீராகவும் தன்னையே மலராகவும் கொண்டு வழிபடின் பிறவியறும். இதுவே ஞானவழிபாடாகும். தன்னைப்பெறுவதை விடவேறு பேறில்லை. ஆதலின் அவ்வாறு பெற்றவர் யாரெனில் தான் இதுகாறும் உலகு உடல் நுகர்வுகளை அறிந்தது போல அவற்றை விடுத்துச் சிவத்தைத் தம்மறிவின் கண்ணே கண்டு வழிபடுவோராயாம். உலகியற் பொருளைப் பற்றி வாழின் துன்பமாம். திருவருள் வழிநிற்பின் இன்பமாம். இவ்வாறு நிற்பார் அகக்கருவிகளால் அலைக்கப்படுவதன்றி இன்புற்றிருப்பர். ஞானியர்கள் தம் கண்ணானும், மனத்தானும் இறைவனையறிந்து பெரிய ஆலமரத்தைத் தன்னகத்து அடக்கி நிற்கும் வித்தெனச் சிவத்தைத் தம்மகத்து அடக்கி நிற்பர். விண்ணும் மண்ணுமாய் எங்குமாய் நிற்கும் பரம்பொருளுக்கு அடியாரின் உள்ளமும் இடமேயாம், ஏனையிடங்களில் விளக்கமின்றி நிற்கும் அப்பரம்பொருள் அவரிடத்து விளக்கம் பெற்று நிற்பர். உலகியற் பொருள்களின் நுகர்வினை இறைவனை உள்ளே காணும் வகையானும் மாற்றலாம். புறத்தே காணும் வகையாலும் மாற்றலாம். அகத்துக் கண்டு வழிபடுதல் அன்புநெறியாம். புறத்துக் கண்டு வழிபடுதல் அறிவு நெறியாம். அகத்தே கண்டு மாற்றியவர்கள் திருக்குறிப்புத் தொண்டர், அரிவாட்டாயர் ஏயர்கோன் கலிக்காமர், மூர்த்தியார், மூர்க்கர் ஆகியோர் ஆவர். கண்ணப்பர், சேந்தனார், மங்கையர்க்கரசியார் போன்றோரும் இவ்வக நெறியாகிய அன்புநெறிநின்று உய்ந்தவர்களாவர். ஆயினும் இறைவனை அகத்துக் காண்டல், புறத்துக்காண்டல் என்ற நினைப்பின்றி எங்கும் கண்டு வழிபடப் பழகின் இறைவன் உமையொரு கூறனாய் வந்தருளுவன். இவ்வாறு உள்ளன்போடு இறைவனை அன்பே, அன்பேயென அழைத்துத் தன் உணர்வையும் முழுமையாக இழப்பின் அதுவே பெறும்பயனாகும். உள்ளன்பு இன்றி நீராடலும், கடவுளை எண்ணுதலும், போற்றி உரை புகறலும் பயனற்றனவேயாம். எல்லாச் சமயங்களும் இவ்வன்பு நெறியே வீட்டைஅடையதற்கு வாயிலெனக் கூறுகின்றன. சிவஞானமும் அதன் நுகர்வும், வித்தும், முளையும் போன்றன. சிவஞானத்திடத்து

சிவநுகர்வு தோன்றாமையின் அதனைக் கைவிடலாமென்பார் வித்திடத்து முளையைக் காணாது அவ்வித்தையே கைவிடுவார் போல்வராம். பொறியடக்கம் கொண்டு திருவருளை நோக்கி இருக்கும் உயிர்க்கு இறைவன் செயலற்று இருக்கும் நிலையை அருளுவன். அதனால் ஆணவ மலமும் நீங்கும். அருள் நெறி நின்று இறைவனோடு பொருந்த வரும் யோகியர்க்கு காலம், இடம், திசை, இருக்கை முதலாய எவ்வித நியமங்களும் இல்லையாம்.

## அருளுரை

இவ்வாறெல்லாம் செய்தற்கரிய செயல்கள் பலவற்றையும் செய்த மெய்யுணர்வுடையார் எய்தற்கரிய பயன் பலவற்றையும் எய்தினர். நாமோ உலகியலுணர்வற இம்மன ஒருமைப்பாடு கொண்டு இன்பம் பெறவேண்டியிருக்க அந்தோ! கொன்னே (வீணே) காலம் கழிக்கின்றோம். மேற்கூறிய சிவதன்மம் முதலாய செயல்களைச் செய்தல் அல்லது செயலற்று இருந்து திருவருளை நோக்கி இருத்தல் அல்லது ஞானநெறிநின்று யாண்டும் எங்கும் சிவமே பார்த்து நின்றல் ஆகிய இவற்றுள் யாதொன்றையும் செய்யாது உண்டிருப்பதால் மட்டும் யாது பயன்? துறவறத்தில் நின்றாலென், இல்லறத்தில் நின்றாலென்? பேரறிவென்னும் ஞானமாகிய வாளினை உள்ளத்தின் கண்ணே பற்றி நில்லாவிடில் தக்கன் செய்த பெரு வேள்வி போலத், தீதாகி விடும். உலகுக்கு ஒரு தலைவன் சிவபெருமானேயென்றும், எனது அறிவும் செயலும் அவனது உடைமையும் செயலுமாம் என்றும் கருதி ஒழுகின் சிவமாம் பெருவாழ்வு கிட்டும். திருப்பாற் கடலைக் கண்டதால் பயன் ஏற்படுவதில்லை. தேனையுண்டால்தான் பயன்பெறமுடியும். அதைப் போலத் திருவருளைப் பெற்றவர்கள் சிவத்தொடு கலப்பினன்றி இன்ப முறுவதில்லை.

## சித்தாந்தச் செந்நெறியின் உயர்வு

ஒப்பற்ற பேரருளை வழங்குதற்கென அருட்சத்தியுடன் ஆடல் செய்யும் இறைவனும், எலும்பையும் பெண்ணுருவாகச் செய்யும் அடியவரும் இச்சமயத்திலல்லது வேறு எச்சமயத்திலும் உளதாகக் கேட்க இயலவில்லை. அச்சமயநெறியில்உறலப்புற்றோர் அம்மையப்பரின் அருள் பெற்றவராய்த் தமக்குண்டான பேரின்பப் பெருவாழ்வில் அழுந்தி நிற்பர். அன்றியும் அவர் தத்துவங்களிலும் உயிர்களிலும் கலந்து நிற்கும் இறைவனைத் தம்முணர்வில் நேர் பெறவரும் ஞானச் செல்வராய் விளங்குவர்.

## ஞானியர் இயல்பு

ஆற்று நீர் கடலொடு கலந்து மீண்டபின் அதன் உவர்ப்பே அதன் கண்ணும் இருக்கும். அதைப் போன்றே இறையருளில் தோய்ந்த ஞானியர் உடலொடு இருப்பினும் சிவானுபவம் பொருந்தியவராகவே இருப்பர். ஞானசம்பந்தர் பாலையை நெய்தலாகப் பாடியதும்,நாவுக்கரசர் பாம்பின்விடம் நீங்கப்

பாடியதும், சுந்தரர் முதலையுண்ட பாலனை மீட்கப்பாடியதும் அவர்கள் திருவருளில் தோய்ந்த வண்ணம் இருந்து அவர்களின் கரணங்களும் அவ்வருள் வழிப்பட்டமையாலேயாம். தூக்கம்வந்துற்றார்க்குத் தூய படுக்கையும் கிடைப்பின் அதன் பயன்மிக நன்கு தூங்கிவிடுவர். அதைப்போன்றே முன்னமேயே இறைவனின் திருவருள் வீழ்ச்சி பதியப் பெற்றவர்க்கு இறைவனின் அருள் நோக்கமும் கிட்டுமாயின் மேலும் அத்திருவருள் வயத்ததாகியேவிடுவர். இத்தகைய ஞானியர் ஒடுங்கின் உலகமும் ஒடுங்கும், அவர்கள் திருநோக்கம்படின், இவ்வுலகம் எழுச்சி தரும். அவர்கள் வெகுளின் செல்வமும், புகழும், கல்வியும் இவ்வுலகில் தங்கா, இறைவன் தன் செயலை இத்தகைய மெய்யுணர்வுடையோரின் வாயிலாகச் செய்வன். ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் ஆகிய நால்வரும் செய்த அருட்செயல்கள் இறைவன் அவர்களைக்கொண்டு செய்த அருட்செயல்களேயாம். இத்தகைய அருட்செயல்கள் சிவயோகத்தின் பயனாக விளைவதால் இச்சிவயோகமே யோகமாகும். இதுவல்லாத யோகங்கள் அவயோகமேயாகும். யோகியர் தம் உணர்வையும், செயலையும் இறையருள் வழியே இயக்குதலால் உடலூழால் நுகரும் செயல்களின் பயன் அவர்களுக்கு உளவாவதில்லை.

### தம்மனுபவம்

சமய உண்மைகூறும் இலக்கண நூல்கள் பலவும் ஒன்று உரைத்ததைப் பிறிதொன்று உரையாது. இங்ஙனமாக யான் எந்த அளவு கூற முடியும்? அவ்வாறு கூறினும் அனைவரும் ஒரு முகமாக எங்ஙனம் ஏற்க முடியும்? எனக்குக் கிட்டிய பேரறிவு வழிவழியாக அருளிச் செய்யப் பெற்ற சிறப்புடையது. எனது ஞானசாசிரியரால் எனக்குக் கிடைக்கப் பெற்ற பேரறிவையே இந்நூல்வழிக் கூறுகின்றேன்.

தில்லையில் எழுந்தருளியிருக்கும் கூத்தப்பெருமானே தன் அளவிறந்த கருணையால் என்னைப்போல்வதொரு வடிவு கொண்டு என்மலமகல ஆட்கொண்டருளினன். குருவருளால் பெற்ற பேரின்பத்தை இத்தகையதென யான் எவ்வண்ணம் கூறுவேன்?. அவரவரின் தத்தம் துய்ப்பறிவாலேயே நுகர்ந்து இன்புற முடியும்.

இறைவனே தன்னருட்பெருக்கினால் குருமூர்த்தியாக எழுந்தருளி எனது விலங்காகிய ஆணவத்தை நீக்கித் தன் பொன்னடியை என்மேல் சூட்டினான். இறைவன் என் பாசமாகிய குற்றங்களை அறுத்து என்னை ஆட்கொண்டு என் நினைவில் நின்று அதன் பயனாகப் பேரின்பத்தையும் வழங்கி அருளினன். அத்தகையோன் திருவியலூரினன்றா சிவயோகியாகிய ஆளுடையதென்னும் திருப்பெயரை உடையன். என்போன்றோரையும் ஏற்றருளும் இரக்கமுடையான். அவனே அடியார்கட்குத் தலைவனாவான். அவனே பிறவி வழிவரும் உடலை மாற்றியவன்.அப்பெருமான் பருவத்தே வந்து என்பிறவி வேரையறுத்து அடிமையாக்கினன். அவனுக்கு யான் யாது கைம்மாறு செய்ய இயலும்? இது பொழுதே எனக்கு வீட்டின்பம் கிடைப்பினும் கிடைக்கஅன்றி அதனை நான் விரும்பும் அமையத்தே

அவன் தந்தருளினும் தந்தருள்க. என்னை ஆட்கொண்டிருக்கும் அம்மையப்பருக்கு அடிமையாய் இருத்தலன்றி வேறு எதனையும் அறியேன்! என்னை எப்பொழுதும் அடிமையாக உடைய அப்பெருமான் என்னுடன் கலந்து என்னறிவில் நின்று என்னை அடிமையாகவும் கொண்டு இயக்குதலால் என்னை நானறியப் பெற்றேன். என்போன்று தன்னைத்தான் அறிந்திருக்கும் அடியவர்களோடும் கூடி ஒழுகப்பெற்றேன். என் உள்ளத்தும் என் தலையிலும் தன் திருவடியைச் சூட்டி ஆட்கொள்ள வந்த பெருமானை, பேரின்பம் வழங்கியவனை, அம்மையப்பராக விளங்கும் தொன்மைக் கோலத்தோடு நின்றருளுபவனை என்றும் வாழ்ந்தருள்க என வாழ்த்துவதல்லது வேறு என்சொல்லி வாழ்த்துகேன்.

## உவமைகள்

ஆசிரியர் தாம் எடுத்துணர்த்தும் மெய்ப்பொருளை இனிதாகவும் செவ்விதாகவும், உணர்த்துதற்குத் தக்க உவமைகளைக் கையாண்டுள்ளார். அவை குறிக்கத்தக்கன.

1. ஆர்த்த கடல் தண்ணீர் குடித்தவர்க்குத் தாகம் தணிந்திடுமோ (6)
2. இன்று பசுவின் மலமன்றே இவ்வுலகில் நின்ற மலமனைத்தும் நீக்குவது (7)
3. ஆற்றால் அலைகடற்கே பாய்ந்த நீர் அந்நீர்மை மாற்றிஅவ்வாற்றான் மறித்தாற்போல் (11)
4. தூங்கினரைத் தூயசயனத்தே விட்டதற்பின் தாங்களே சட்ட உறங்குவார்கள் - ஆங்கதுபோல் (13)
5. உழவும் தனிசும் ஒருமுகமேயானால் அழவுண்டோ சொல்லாய் இனி (21)
6. தாழ்ந்த மணி நாவேபோல் (32)
7. வடம் அடக்கி நிற்கும் வடவித்தே போல (48)
8. வித்தும் அதன் அங்குரமும் போன்று (57)
9. மன்னன் அருள் எவ்வண்ணம் மானுடர்பால் மாணவக அன்ன வகையது (75)
10. கடலுயிர்த்த இன்னமுதம் உண்டவரே உண்டார் சுவை (77)
11. நங்கையினால் நாமனைத்தும் செய்தாற்போல் (78)
12. பொன்னிறம் கட்டியினும் பூணினும் நின்றாற்போல் (79)
13. உன்னுதரத்தே கிடந்த கீடம் உறுவதெல்லாம் உன்னுடைய தென்னாய் நீ உற்றனையோ? மன்னுயிர்கள் அவ்வகையே காண் (87)
14. கடலலைத்தே ஆடுதற்குக் கைவந்து நின்றும் கடலளக்க வாராதாற்போல் (90)
15. அவனிதனின் தோன்று மரப் புல்லூரி தொல்லுலகில் அம்மரமாய் ஈன்றிடுமோ சொல்லாய் இது (92)

## உருவகம்

திருவுந்தியாருக்கு வழிநூலாகத் தோன்றியது என்பதற்கேற்ப அந்நூல் வழி விளக்கிய உருவகம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாம்.

முத்தி முதலுக்கே மோகக் கொடிபடர்ந்த(து)
அத்தி பழுத்ததென் றுந்தீபற
அப்பழ முண்ணாதே யுந்தீபற

இம்முதறனூற் கருத்தை மிக அழகாக

முத்தி முதற்கொடிக்கே மோகக் கொடிபடர்ந்(து)
அத்தி பழுத்த தருளென்னுங் - கத்தியினால்
மோகக் கொடியறுக்க முத்திப் பழம்பழுக்கும்
ஏகக் கொடியெழுங்காண் இன்று.

என இந்நூல் விளக்கியுள்ள திறம் அறிந்தின்புறுதற்குரியது.

## திருத்தொண்டர்களின் வரலாற்றுக் குறிப்புகள்

ஆசிரியர் பொதுவாகத் திருத்தொண்டர்களிடத்தும் சிறப்பாகச் சமயகுரவர் நால்வரிடத்தும் கொண்டிருக்கும் பற்று மிகவும் பாராட்டுதற்குரியதாகும்.

### சமயகுரவர்

ஞானசம்பந்தர் - பாலைநெய்தல் பாடியது (12) ஞானசம்பந்தரின் பெயர்கேட்ட மாத்திரத்தே மங்கையர்க்கரசியாருக்குப் பால் சுரந்தது (54) அங்கம் உயிர் பெறவே பாடியது (65), இவையன்றி, ஓடம் சிவிகை உலவாக்கிழியடைக்கப், பாடல் பனைதாளம் பாலைநெய்தல் - ஏடெதிர் வெப்(பு) என்புக் குயிர் கொடுத்தல் ஈங்கிவைதாம் ஓங்கு புகழ்த், தென்புகலி வேந்தன் செயல் என இவர்தம் அருளிச் செயல்களைத் தொகுத்தும் போற்றுவர்.

நாவுக்கரசர் - பாம்பொழியப் பாடியது (12) இதுவன்றிக் கொல்கரியின் நீற்றறையின் நஞ்சிற் கொலைதவிர்த்தல், கல்லே மிதப்பாய்க் கடல் நீந்தல் - நல்ல, மருவார் மறைக் காட்டில் வாசல் திறப்பித்தல், திருவாமூ ராளி செயல் என இவர்தம் அருளிச் செயல்களைத் தொகுத்தும் போற்றுவர்.

சுந்தரர் - காலனை அன்று ஏவிக் கராங்கொண்ட பாலன் மரணம் தவிர்த்தது (12) இதுவன்றி, மோகம் அறுத்திடின் நாம் முத்தி கொடுப்பதென, ஆகமங்கள் சொன்ன அவர்தம்மைத் தோகையர்பால் தூதாகப் போகவிடும் வன்றொண்டன் தொண்டுகளை, ஏதாகச் சொல்வேன் யான் என இருவருக்கு இறைவனருளிய அருட்திறத்தை வியந்தும் போற்றுவர்.

மணிவாசகர் - பாய்பரியொன்(று) அந்தப் பரமானந்தப்பரனைத் தூயதிருவாய் மலராற் சொற்செய்து மாயக் கருவாதை யாமறியாவாறு செய்தான் கண்டாய் திருவாதவூராளுந்தேன் என இவரைப் பாராட்டி மகிழ்வர்.

பிறதொண்டர்கள் - சிறுத்தொண்டர் (18) சண்டீசர் (19) அரிவாட்டாயர் (20) திருக்குறிப்புத்தொண்டர் (50) ஏயர்கோன் கலிக்காமர் (50) மூர்த்தியார் (50) மூர்க்கர் (50) கண்ணப்பர் (52) சேந்தனார் (53)

தக்கனார் - வேள்வியும் தன் முனைப்போடு செய்யின் பயன் தராது என இவர் மூலம் விளக்கப்படுகின்றது.

## முன்னோர் மொழிபொருள்

முன்னோர் மொழிபொருளைப் பொன்னே போல் போற்றி யுரைக்கும் திறன் இவ்வாசிரியர் மாட்டுப்பெரிதும் காணப்படுவதொன்றாகும்.

### 1. திருவுந்தியாரும் திருக்களிற்றுப்படியாரும்

திருவுந்தியார் நாற்பத்தினான்கு பாடல்களில் அமைந்துள்ளது. இந்நூல் நூறு வெண்பாக்களைக் கொண்டது. நாற்பத்தினான்கு பாடல்களில் விளக்கப்பட்ட கருத்தையே இந்நூல் 100 பாடல்களில் விளக்குகிறது. இவ்வகையில் விளக்கம் தருமாற்றைப் பின்வருமாறு அறிஞர்கள் தொகுத்துக் கூறுவர்.

| திருவுந்தியார் | திருக்களிற்றுப்படியார் | திருவுந்தியார் | திருக்களிற்றுப்படியார் |
|---|---|---|---|
| 1 | 4 – 5 | 23 | 42 – 43 |
| 2 | 6 – 7 | 24 | 44 – 45 |
| 3 | 8 | 25 | 46 – 50 |
| 4 | 9 – 10 | 26 | 51 – 52 |
| 5 | 11 | 27 | 53 – 56 |
| 6 | 12 – 13 | 28 | 57 |
| 7 | 14 - 21 | 29 | 58 – 62 |
| 8 | 22 | 30 | 63 – 64 |
| 9 | 23 – 24 | 31 | 65 – 68 |
| 10 | 25 | 32 | 69 – 75 |
| 11 | 26 | 33 | 76 |
| 12 | 27 – 28 | 34 | 77 |
| 13 | 29 | 35 | 78 – 79 |

| | | | |
|---|---|---|---|
| 14 | 30 | 36 | 80 – 81 |
| 15 | 31 | 37 | 82 – 83 |
| 16 | 32 | 38 | 84 |
| 17 | 33 | 39 | 85 – 91 |
| 18 | 34 | 40 | 92 |
| 19 | 35 | 41 | 93 – 94 |
| 20 | 36 – 37 | 42 | 95 – 96 |
| 21 | 38 – 40 | 43 | 97 – 99 |
| 22 | 41 | 44 | 100 |

பொருள் வகையால் உணரத்தக்கது இதுவாகும். இனித்திருவுந்தியாரின் தொடர்களை அவ்வாறே முகந்து நிற்கும் பாடல்கள் பல உள. அவை ஈண்டுச் சிறப்பாகக் குறிக்கத் தக்கனவாம்.

| திருவுந்தியார் | திருக்களிற்றுப்படியார் | திருவுந்தியார் | திருக்களிற்றுப்படியார் |
|---|---|---|---|
| 1 | 4 | 26 | 51 |
| 3 | 8 | 27 | 53 |
| 4 | 9 | 28 | 57 |
| 8 | 22 | 30 | 63 |
| 9 | 23 | 31 | 65 |
| 10 | 25 | 32 | 69 |
| 13 | 29 | 34 | 71 |
| 15 | 31 | 40 | 92 |
| 16 | 32 | 41 | 93 |
| 17 | 33 | 44 | 100 |
| 19 | 35 | | |

## 2. திருக்குறள் கருத்துக்கள்

1. “சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரும் நோய்" இதனைச்
சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் என்றமையால்
சார்புணர்தல் தானே தியானமுமாம் - சார்பு

கெடவொழுகின் நல்ல சமாதியுமாம் கேதப்
படவருவ தில்லைவினைப் பற்று. **- களிறு 34**

என வரும் பாடல் ஏற்று நிற்றல் காண்க.

2. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

இதனை

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்றமையால்
வேண்டின் அஃதொன்றுமே வேண்டுவது – வேண்டினது
வேண்டாமை வேண்டவரும் என்றமையால் வேண்டிடுக
வேண்டாமை வேண்டுமவன் பால். **- களிறு 40**

எனவரும் பாடல் ஏற்றுநிற்றல் காண்க.

**திருவாசகக் கருத்துக்கள் இரண்டிடங்களில் இடம் பெற்றுள்ளன.**

1. கண்ணப்ப னொப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய்க் கோத்தும்பி.

என்பது திருவாசகம், இதனைக்

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மையென்றமையால்
கண்ணப்ப னொப்பதோரன்பதனைக் - கண்ணப்பர்
தாமறிதல் காளத்தி யாரறித லல்லதுமற்
றாரறியு மன்பன் றது. **- களிறு 52**

எனவரும் பாடல் ஏற்றுப் போற்றி நிற்றல் காண்க

2. புவனியில் சேவடி தீண்டினன் காண்க
அவன் எனை ஆட்கொண்டருளினன் காண்க
சிவன்என யானும் தேறினன் காண்க.

என்பது திருவாசகத்தில் உள்ள திருவண்டப்பகுதியாகும். இதனை

சிவனெனவே தேறினன்யா னென்றமையா லின்றுஞ்
சிவனவனி வந்தபடி செப்பி – லவனிதனி
லுப்பெனவே கூர்மை யுருச்செய்யக் கண்டமையா
லப்படியே கண்டா யவன். **- களிறு 91**

என்ற பாடல் ஏற்றுப் போற்றி நிற்றல் காண்க

## ஆ. திருஞானசம்பந்தர் திருவாக்கு

ஈறாய்முத லொன்றாயிரு பெண்ணாண் குணமூன்றாய்
மாறாமறை நான்காய்வரு பூதமவை யைந்தாய்
ஆறார்சுவை யேழோசையொ டெட்டுத் திசைதானாய்
வேறாயுட னானானிடம் வீழிம் மிழலையே.

என்பது ஞானசம்பந்தர் திருவாக்காகும். இதனை

ஈறாகி யங்கே முதலொன்றா யீங்கிரண்டாய்
மாறாத வெண்வகையாய் மற்றிவற்றின் - வேறா
யுடனா யிருக்கு முருவுடைமை யென்றுங்
கடனா யிருக்கின்றான் காண். - **களிறு 86**

எனவரும் பாடல் ஏற்றுப் போற்றிநிற்றல் காண்க.

## நூலாசிரியர்

இதனை அருளியவரின் இயற்பெயர் தெரிந்திலது. இவர் ஆட்டு வாணிகக் குலத்தில் தோன்றியவர். திருக்கடவூரினர். பிறப்பின் சார்பு இதுவாயினும் இவர் பெற்றியால் தவம் முன்செய்தவராவார். திருவியலூர் உய்யவந்ததேவ நாயானரிடத்து உபதேசம் பெற்றவர். ஆளுடைய தேவநாயனார் என்பார் ஒருகால் திருக்கடவூருக்கு எழுந்தருளினார். நம் திருக்களிற்றுப்படியார் ஆசிரியர் தம் தவப்பேற்றால் இவரைக் காணும் பேறுபெற்றார். இவர்பால் அமைந்திருக்கும் ஞான ஒழுக்க நிறைவினைக் கண்ட அவ் ஆளுடைய தேவநாயனார் இவருக்கு உபதேசம் செய்தார்.

தம் குருமூர்த்தியின் திருப்பெயரை இவருக்குச் சூட்டியருளினார். அது முதற்கொண்டே இவர் உய்யவந்த தேவநாயனார் என அழைக்கப்பெற்றார். ஆளுடைய தேவநாயனார் தமக்கெனத் தம் ஆசிரியர் செய்தருளிய திருவுந்தி யாரையும் இவரிடம் தந்தருளினர். உபதேசத்தையும், ஞானநூலையும், ஒருங்குபெறும் பேறு பெற்ற இவர் தில்லைக்குச் சென்றார். அங்கு முன்னமேயே அருளுபதேசம் பெறவேண்டி வதிந்திருந்த ஒருவர் இவரை கண்டு வணங்கித் தம் கருத்தை விண்ணப்பித்துக் கொண்டார். அவரிடத்திருந்த மேம்பாட்டைக் கண்டு இருவரும் அருளுபதேசம் செய்து திருவுந்தியாருக்கு விளக்கமாக இவ்வரிய நூலையும் செய்தருளிப் பின் இறையருட்கு உரியரானார். இவ்வரலாறு திருவுந்தியார் திருக்களிற்றுப்படியாராகிய இருநூலுக்கும் அமைந்துள்ள பொழிப்புரை ஆசிரியராலும் இதனைத்தழுவி எழுதிய சிவப்பிரகாசம் உரையாலும் அறியக்கிடக்கின்றது. இதற்கு ஆதரவாகச் சில குறிப்புக்கள் உள்ளன. இந்நூலாசிரியர் தமக்குரிய ஞானாசிரியரின் பெயரை இந்நூற்கண் குறிப்பிடுகின்றார்.

ஆளுடையா னெந்தரமு மாளுடையா னேயறியுந்
தாளுடையான் தொண்டர் தலைக்காவல் - நாளுந்
திருவிசலூ ராளுஞ் சிவயோகி யின்றென்
வருவிசையை மாற்றினான் வந்து. - **களிறு 96**

என்பது அப்பாடலாகும். இப்பாடலால் இவராசிரியர் ஆளுடையான் என்னும் பெயருடையவர் என்பதும், அவர் திருவியலூரினர் என்பதும் விளங்குகின்றது. இவரிடம் பெற்ற அருளுபதேசம் தமக்கு வழிவழியாக வாய்க்கப் பெற்றதொன்றாகும் என்பதை இவரே பிறிதொரு பாடலில் குறிக்கின்றார்.

என்னறிவு சென்றளவில் யானின்று அறிந்தபடி
என்னறிவி லாரறிக என்றொருவன் - சொன்னபடி
சொல்லக்கேள் என்றொருவன் சொன்னான் எனக்கதனைச்
சொல்லக்கேள்யானுனக்குச் சொல். - **களிறு 3**

என்பது அப்பாடலாகும். இனி இவரின் குலமும் நூற்பெயர்க்காரணமும் விளங்க 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மாரிமுத்தாப்பிள்ளை என்பார் தாம்பாடிய புலியூர் வெண்பாவில் ஒரு பாடலில் குறித்துள்ளார்.

வாட்கை அச வாணிபன் சொல் மாநூலினைப் படிக்கற்
பூட்கை எடுக்கக் கொள் புலியூரே – தாட்கமலம்
போதுளவ னத்தன் புருகூதன் போற்றும் அந்திப்
போதுளவ னத்தன் புவி

என்பது அப்பாடலாகும். இவர் தம் ஆசிரியரிடத்துக் கொண்ட பத்திமைச் சிறப்பு குறிப்பிடத்தகுந்ததாகும். இந்நூற்கண் 94 முதல் 100 வரை உள்ள பாடல்கள் அச்சிறப்பினை விளக்கும். அம்மையப்பராக விளங்கும் இறைவனே தமக்குக் குருமூர்த்தியாக வந்தருளினார் எனவும் அவர் தமக்குச் செய்த அருளுபதேசத்தாலும் தம்மை அடியனாக ஏற்றுக்கொண்டமையாலுமே தமக்கு இத்தகைய பேரின்பப் பெருவாழ்வு கிடைத்ததெனவும் அத்தகைய பெருநன்றி ஆற்றினாற்குப் பெருவாழ்வுகிடைத்த தெனவும் அடிமையாக வாழ்வதன்றி என்ன கைம்மாறு செய்ய இயலும் எனவும், இப்பகுதியில் குறித்துள்ளார். இவையன்றி இவ்வாசிரியரைப் பற்றிச் சிறப்பிக்கும் பாடல் இரண்டுள, அவை

திருச்சிலம் போசை ஒலிவழியே சென்று
நிருத்தனைநீ கும்பிடென்றார் நேயத்து - இருத்தும்
திருக்களிற்றுப் படியார் சேமத்துச் சொன்னார்
குருக்கடைக் கண்ணால் அறிந்து கொள்

பொருளும் மனையும் அறமறந்து போகம் மறந்து புலன்மறந்து
கருவி கரணம் அவை மறந்து காலம் மறந்து கலைமறந்து
தருமம்மறந்து தவம் மறந்து தம்மைமறந்து தற்பரத்தோடு
உருகி உருகி ஒரு நீர்மையாயே விட்டார் உய்யவந்தார்

இவற்றுள் முன்னைய பாடல் தருமை சிவானந்த முனிவர் அருளிய சம்பிரதாய தீபத்தில் உள்ளது. பின்னைய பாடல் யாருடையது எனத் தெரிந்திலது.

## காலம்

திருவுந்தியாருக்குப் பின் இந்நூல் எழுந்தது என்பதும், இது அந்நூற்கு விளக்கமாக அமைந்தது என்பதும் முன்குறிக்கப் பெற்றது. திருவுந்தியார் சகம் 1070-லும் திருக்களிற்றுப்படியார் சகம் 1100-லும் தோன்றின என்பது மரபாகக் கூறி வருவதாகும். இக்கால ஆய்வாளர்களும் இதனை மறுக்காது ஏற்றுள்ளனர். எனவே இந்நூலின் காலம் சகம் 1100 என்பதற்கேற்பக் கி.பி 1178-ல் தோன்றியது எனலாம்.

இத்தகைய உன்னத நூலுக்கு இதுவரை கீழ்க்காண் உரைகள் வெளிவந்துள்ளன.

**திருக்களிற்றுப்படியாருக்கு இதுவரை வெளிவந்துள்ள நூல்கள்**

| வ. எண் | ஆண்டு | நூலின் பெயர் | ஆசிரியரின் பெயர் | பதிப்பகம் |
|---|---|---|---|---|
| 1. | 1940 | திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் மூலமும் உரையும் | காஞ்சி ஆலால சுந்தரம்பிள்ளை | கா.ஏ. வல்லிநாதன் பெரியநாயகி அம்மையார் அச்சுக்கூடம் |
| 2. | 1951 | திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் உரை | முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் | முத்து வைத்தியலிங்க செட்டியார் 60 ஆண்டு நிறைவு விழா மலர் |
| 3. | 1951 | திருக்களிற்றுப்படியார் பழைய உரை | தில்லைச்சிற்றம்பலவர் என்னும் சிவப்பிரகாசனார் | திருவாவடுதுறை ஆதீனம் |
| 4. | 1954 | திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் அருளிய திருக்களிற்றுப்படியாரின் விளக்கக் கட்டுரை | வித்துவான் தே.ஆ. சீனிவாசாரியன் | திருவாவடுதுறை ஆதீனம் |
| 5. | 1982 | திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் | பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் | காசிமடம் |
| 6. | 1991 | திருக்களிற்றுப்படியார் (தெளிவுரையுடன்) | பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி | காசிமட வெளியீடு 2008 வரை 5 பதிப்புகள் வெளிவந்துள்ளன |
| 7. | 2000 | திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் | சி.சு. மணி | அருள்நந்தி சிவம் அருட்பணி மன்றம் |
| 8. | 2018 | திருவுந்தியார் விளக்கவுரை | மேற்காண் உரைகளின் தொகுப்பு | பன்னிரு திருமுறை ஆய்வு மையம் கற்பகம் நிகர்நிலைப் பல்கலைக்கழகம் |

தோத்திர நூல்களை வெளியிட்டு நிறைவடைந்த நிலையில் சாத்திர நூல் வெளியிடத் திருவருள் ஆணைகூட்ட, சித்தாந்த சாத்திர நூல்கள் வரிசையில் முதல் நூலான திருவுந்தியார் இன்று காலை வழிபாட்டுக் கருத்தரங்கில் வெளியிடப்பட்டு, இரண்டாவது நூலான திருக்களிற்றுப்படியார் நூல் விளக்கவுரையுடன் இன்றே மதியம் வெளியிடப்பட்டுக் கருத்தரங்கம் கீழ்க்கண்ட அட்டவணைப்படி நிகழவுள்ளது.

## திருக்களிற்றுப்படியார் : நிகழ்ச்சி நிரல்

27.10.2018, 28.10.2018 - **சனி, ஞாயிறு**

| வ. எண் | சொற்பொழிவாளர் / நாள் / நேரம் | தலைப்பு | தொடர் பாடல் எண்கள் | பாடல் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | சிவத்திரு **மதன்முரளி** அவர்கள்<br>27.10.2018 சனி பிற்பகல் 02.00–04.00 | திருக்களிற்றுப்படியார் | 1–25 | 25 |
| 2. | சிவத்திரு **ஜானகிராமன்** அவர்கள்<br>27.10.2018 சனி மாலை 04.00–06.00 | திருக்களிற்றுப்படியார் | 26–50 | 25 |
| 3. | சிவத்திரு **சு. குஞ்சிதபாதம்** அவர்கள்<br>28.10.2018 ஞாயிறு காலை 09.00–11.00 | திருக்களிற்றுப்படியார் | 51–75 | 25 |
| 4. | சிவத்திரு **சிவ. காந்தி** அவர்கள்<br>28.10.2018 ஞாயிறு நண்பகல் 11.00–01.00 | திருக்களிற்றுப்படியார் | 76–100 | 25 |

அடியார்கள் பங்கு பெற்றுத் திருவருள் பெற வேண்டுகிறோம்.

இரண்டு திங்களுக்கு ஒருமுறை சுமார் பன்னூறு பாடல்கள் கொண்ட ஒரு திருமுறையை முறையாகப் படித்து, அச்சுப்பிழை பலமுறை பார்த்துக் கடின உழைப்பின் பயனாக நூலை வெளியிடும் முனைவர் ப. தமிழரசியைத் தலைவராகக் கொண்டு செயல்படும் தமிழ்த்துறையின் முனைவர் இரா. மதன்குமார், முனைவர் செ. ஆறுச்சாமி உள்ளிட்ட ஆசிரியர்களுக்கும், நூலாக்க ஒருங்கிணைப்புப் பணியில் செயலாற்றுகின்ற திரு. ப. வெள்ளிங்கிரி, கணினி நிபுணர்களான திரு.மு. மகேஷ், திரு. து. சசி அவர்களுக்கும், நூலைச் சிறப்பாக அச்சிட்டு வழங்கும் செஞ்சுடர் அச்சகத்தார்க்கும் மனமுவந்த நன்றிகள். அவர்கள் இம்மை, மறுமை, இன்பம் பெறுவார்களாக.

அனைவரும் வருக. சிவனருள் பெறுக.

நன்றி.

அன்பன்,

**இராச. வசந்தகுமார்**

நிறுவன வேந்தர்

கற்பகம் நிகர்நிலைப் பல்கலைக்கழகம்

இடம் : கோயம்புத்தூர்

நாள் : **09.08.2018**